# திருமலைத்தீபம்

Thirumalaitheepam

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் – 30
விலை ரூபாய் 20.00

தீபம்-30 | ஆடி இதழ்-2016,
ஆரம்பம் 15 மாசி-2013.

திருமறைக்கல்வி நடுநிலையம்,
இல: 297 டொக்கியாட்வீதி, திருகோணமலை.

E-mail : catetcota@gmail.com
T.P : 026 222 1022, 026 320 2532


"ஆண்டவரது திருமுகத்தை இடையறாது நாடுங்கள். [தி.பா – 105:4]"



## மறைமாவட்ட குருமுதல்வரின் ஆசிச் செய்தி

**கிறிஸ்து இயேசுவில் மிகவும் பிரியமானவர்களே!**

ஆடி (ஜூலை) மாதத்தில் காலடி பதிக்கும் இவ்வேளையிலே உங்கள் அனைவரையும் வாழ்த்துகின்றேன். இம்மாதம் தாங்கி வரக்கூடிய அநேக நன்மைகளையும், இறைவனின் ஆசீர்வாதங்களையும் உங்களுக்குச் சொந்தமாக்கிக்கொள்ள ஆசிக்கின்றேன்.

இம்மாதம் திருச்சபை சார்பாக ஒரு சில முக்கிய தினங்களையும் எமது மறைமாவட்டம் சார்பாக சில சிறப்புத் தினங்களையும் தாங்கி வருகின்றது.

ஆடி மாதம் 02ம் நாள் எமது மறைமாநில சிறிய குருமடத்தின் பாதுகாவலரான தூய யோசேவாஸ் அடிகளாருடைய திருநாள் கொண்டாடப்படுகின்றது. இச்சிறிய குருமடம் தற்போது சாம்பல்தீவு தூய திருமுழுக்கு யோவான் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ளது. சிறு மந்தையாக உருப்பெற்றுள்ள இது பல்சுவை கனிதரும் விருட்சமாக வளர உமது பங்களிப்பை விசேட விதமாக எமது செபங்களை அர்ப்பணிப்போம். பயிற்சிபெறும் மாணவர்களையும் அவர்தம் பெற்றோர்களையும் நன்றியோடு நினைவுகூருவோம்.

ஆடி மாதம் 04ம் நாள் திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாநிலம் திருகோணமலை மறைமாநிலமாக, மட்டக்களப்பு மறைமாநிலமாக உருவாக்கப்பட்ட சிறப்புத் தினமாகும். அதிலும் மட்டக்களப்பு மறைமாநிலம் என்னும் புதிய மறைமாநிலம் உருவாக்கப்பட்ட நாளாகவும் நினைவுகூரப்படுவது குறிப்பிடத்தக்கது. இந்நாளில் திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாநிலமாக இணைந்திருந்து நாம் பெற்ற நன்மைகளுக்காக இறைவனுக்கு நன்றி சொல்வோம். அதே போல தனித்தனி மறைமாநிலங்களாக உருப்பெற்று தொடரும் தற்போதைய பயணத்தில் இறைவனின் துணை வேண்டுவோம்.

ஆடி மாதம் 16ம் நாள் தூய கார்மேல் அன்னையின் நினைவுநாளாகும். அன்றைய நாளில் அனைத்து அப்போஸ்தலிக்க கார்மேல் சபை அருட்சகோதரிகளுக்காக, சிறப்பாக எமது மறைமாநிலத்திலே பணியாற்றும் அருட்சகோதரிகளுக்காக அவர்கள் ஆற்றும் கல்விசார் சிறப்புப் பணிக்காக எமது ஒத்துழைப்பையும் நல்குவோம். இறைவரம் வேண்டுவோம்.

ஆடி மாதம் 25ம் நாள் எமது மறைமாநிலத் திருச்சபைக்கு மிக முக்கியமான, மகிழ்ச்சியானதொரு நாளாகும். ஏமது மறைமாநிலத் தந்தை பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவல் ஆண்டகை அவர்கள் ஆயராகத் திருப்பொழிவு செய்யப்பட்ட முதல் ஆண்டு நிறைவாகும். நன்றியோடும் இறை புகழ்ச்சியோடும் நினைவுகூரப்படவேண்டிய நன்னாளாகும். ஆண்டவரின் இம்மாபெரும் கொடைக்காக நன்றி சொல்வோம். மேன்மைமிகு ஆயர் அவர்களுடைய முயற்சிகளுக்கும், முன்னெடுப்புகளுக்கும் மனமுவந்து ஒத்துழைப்பை நல்குவோம். எமது மறைமாநிலத்தைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒருங்கிணைந்து செயல்படுவோம்.

ஆடி மாதம் 30ம் நாள் எமது மறைமாநிலத் திருச்சபையின் வெல்வெரி ஆலயத்தின் திருவிழா கொண்டாடப்படவுள்ளது. தூய பெரிய யாகப்பர் என அழைக்கப்படும் இத் திருத்தூதர் செபதேயுவின் மக்களுள் ஒருவராவார். திருத்தூதர்களுள் முதலாவதாக மறைசாட்சியாகத் தன்னையே தியாகம் செய்தவருமாவார். வெல்வெரியில் அமைந்துள்ள இவருடைய ஆலயம் பல ஆண்டுகளுக்குப் பின்னர் பொதுமக்களின் பாவனைக்காக மீண்டும் ஆயத்தமானதை நாமறிவோம். சென்ற வருடம் இந்தத் திருவிழாவைக் கொண்டாட எமக்கு வாய்ப்புக்கிட்டவில்லை. எனவே இவ்வருடம் அனைவரும் ஒன்றிணைந்து இத் தூயவருடைய விழாவைச் சிறப்புடன் கொண்டாட அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

ஆடி மாதம் 31ம் நாள் உலகளவில் சுதேச குருக்கள் - அருட்சகோதர சகோதரிகளுடைய சிறப்பு நாளாகக் கொண்டாடப்படுகின்றது. எமது மறைமாவட்டத் திருச்சபையில் பணியாற்றும் அனைத்து ஆயர், குருக்கள், துறவற சபை அருட்சகோதர சகோதரிகள் அனைவருக்காகவும் மன்றாடுவோம். எமக்காகப் பணியாற்றி, தம் வாழ்வை அர்ப்பணித்து இறைபதம் அடைந்திருக்கக்கூடிய அனைத்து ஆயர்கள், குருக்கள், துறவறசபை அருட்சகோதர சகோதரிகள் அனைவரும் தம் அர்ப்பண வாழ்வுக்கான சம்பாவனையை பெற்றுக்கொள்ள இறைவனிடம் மன்றாடுவோம்.

தொடர்ச்சி 2ம் பக்கம்

## திருமலையில் தூய ஜெம்மா கல்கானியின் தூய உடற்கூறு



**தூய ஜெம்மா கல்கானி**

பிறப்பு :
12-03-1878

இறப்பு :
11-04-1903



இத்தாலியின் லூக்கா நகரில் வாழ்ந்த தூய ஜெம்மா கல்கானியின் எலும்பின் ஒரு சிறு பகுதியும், பல தூயவர்களின் உடைகளின் சிறு பகுதிகளும் திருகோணமலை மறைமாவட்டத்தில் பல்வேறு இடங்களில் காட்சிப்படுத்தப்பட உள்ளன.

அதேபோல புனித பூமியுடன் தொடர்புடைய பல பொருட்களும் காட்சிப் படுத்தப்பட உள்ளன. இது தொடர்பான விபரங்கள் விரைவில் பங்குத் தந்தையர்கள் ஊடாக அறிவுறுத்தப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

**மேலதிக தொடர்புகளுக்கு :**

01) அதி வண ஆயர் கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல்
ஆயர் இல்லம்,
உவர்மலை.


02) அருட்பணி. சீ. ஜெயரட்ணம்
தூய வனத்து அந்தோனியார் ஆலயம்,
செல்வநாயகபுரம்.

## Congratulations



**ஆயர்த்துவ திருப்பொழிவு ஆண்டு நிறைவு**

**25-07-2016**



மறைமாவட்ட பாதுகாவலர் தினம்
இயேசுசபை குருக்களின் விழா
31-07-2016

செபிப்போம் வாழ்த்துவோம்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"புழுதியில் வாழ்வோரே விழித்தெழுந்து மகிழ்ந்து பாடுங்கள். [எசா 26:19]"

## உங்களோடு பேசுகிறேன்...

அருட்பணி. N.C. அருள்வரதன்

புதிய மாதம். இம்மாதத்திலே மீண்டும் உங்களோடு பேசுவதற்கு ஒரு வாய்ப்பு அது எனக்குப் பெருமகிழ்வே. இம் மாதத்திலே திருவழிபாட்டை நோக்கும் போது திரு இருதய ஆண்டவரின் விழாவினை மூன்றாம் திகதி இருதயபுர மக்களும் பத்தாம் திகதி கந்தளாய் மக்களும் கொண்டாடுகிறார்கள். இம் மாதத்தில் தூய பேதுரு தூய பவுல் விழாவினை மூதூர் கங்கை மக்கள் கொண்டாடுகினறார்கள். மேலும் மூன்றாம் திகதி புல்மோட்டை இறை மக்கள் மடுமாதா ஆலய விழாவை கொண்டாடுகின்றார்கள். இருபத்திநாலாம் திகதி சலப்பை ஆறு மக்கள் சிந்தாத்திரை மாதாவின் விழாவினை கொண்டாடுகின்றார்கள். மூன்றாம் திகதி அலஸ்தோட்ட இறைமக்கள் தங்கள் துனைப்பங்கிலே மடுமாதாவின் விழாவை கொண்டாடுகின்றார்கள். இருபத்தைதாம் திகதி இன்னும் ஒரு சிறப்பான நாளாகும். நமது மறைமாநிலத்தின் ஆயர் மேதகு கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்கள் ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டு முதலாம் வருடமாகும். ஆயரின் பணிகள் தொடர்ந்தும் சிறப்புற ஆசிகூறி வாழ்த்துகின்றோம்.

இம் மாதத்திலே பதினாறாம் திகதி கார்மேல் சபையின் விழாவாகவும் முப்பத்தோராம் திகதி இயேசு சபையினரின் விழாவும் கொண்டாடப்படுகின்றது. இவர்களுக்கு தொடர்ந்தும் இறைபணியிலே வளங்கள் காண ஆசிகூறி வாழ்த்துகின்றோம்.

இம் மாதத்திலே இருபத்தெட்டாம் திகதி "சர்வதேச அகதிகள்" தினம் நினைவு கூறப்படுகின்றது. அகதிகள் என்பது இப்போது சர்வ சாதாரணமாகிவிட்டது. நமது நாட்டிலே யுத்தம் முடிவடைந்துவிட்டது. ஆனால் இன்னும் முகாம்கள் மூடப்படவில்லை. அதே வறுமை வெறுமை என்பன தொடர்கதைகளாவே இருக்கின்றன.

யுத்த முகாம்கள் ஒருபுறமாய் இருக்கும்போது, இயற்கை அழிவுகள், வெள்ளம், மண்சரிவு, நில அதிர்வுகள் ஏற்படுத்திவிட்ட முகாம்களும் புதிதாக உருவாகிவிட்டன எப்படி என்றாலும் இத் துன்ப நிலைகளுக்குள்ளிருந்து மனிதர்கள் விடுவிக்கப்பட வேண்டும். அவர்களின் இயல்பு வாழ்வுக்குள் அவர்கள் சென்று துயர்களை மறந்து வாழ்வதற்கு ஆவண செய்யப்பட வேண்டும். இதுவே அனைவரின் விருப்பாக இருக்கின்றது. இம் மாதம் ஆறாம் திகதி றம்ழான் தினத்தை இஸ்லாமிய சகோதரர்கள் கொண்டாடுகின்றார்கள். இவர்களுக்கும் எங்கள் நல்வாழ்த்துக்கள்.

நமது அரசியல் சூழல்கள் குறிப்பாக வடக்கு கிழக்கு மலையக மக்களின் வாழ்வாதாரங்கள். இன்னும் சிறப்பாக யுத்த காலத்தின்போது வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட இஸ்லாமிய சிங்கள மக்களை மீண்டும். அவர்களின் இடங்களிலே சேர்பதற்கு ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. நிச்சயமாக இது ஒரு வரவேற்கப்படவேண்டியதொன்றாகும். மீண்டும். அவர்கள் தங்கள் சொந்த இடங்களிலே சென்று வாழவேண்டுமென நாங்களும் வேண்டி நிற்கின்றோம் .

புதிய ஆட்சி நகர்ந்து கொண்டிருக்கும்போது மக்கள் அனைவரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நீதியோடுகூடிய ஆட்சியினையும் பிளவுகளற்ற உறவுகளும் ஒன்றிணைந்து நலன்களைக்காண ஆட்சியாளர்கள் வழிகாட்ட வேண்டுமெனக்கேட்டு அதுவே நிகழ நாங்களும் வேண்டிநின்று மீண்டும் உங்களோடு பேசுவேன் என கூறி நிற்கின்றேன்.

☞ 01ம் பக்கத் தொடர்ச்சி

## மறைமாவட்ட குருமுதல்வரின்...

அதே நாளில் எமது மறை மாநிலத்தின் பாதுகாவலரான தூய லொயலா இஞ்ஞசியாருடைய திருநாளையும் கொண்டாடுகின்றோம். இப்புனிதரின் வழிகாட்டலில் பணியாற்றும் இயேசுசபை துறவிகள் பல்வேறு வழிகளில் எமது மறை மாநிலத் திருச்சபையைக் கட்டி உருவாக்கியுள்ளனர். அவர்களுடைய கடந்தகால பணிகளுக்காக இறைவனுக்கு நன்றி சொல்வோம். அவர்களுடைய நிகழ்கால பணிகளுக்காக, சிறப்பாக எமது மறைமாநிலத்தில் மனித உரிமைகள் சார்பாக அவர்கள் ஆற்றும் பணிகளுக்காக, சபை வளர்ச்சிக்காக எமது ஆதரவையும் ஒத்துழைப்பையும் நல்குவோம்.

இறைபராமரிப்பு என்றும் உங்களோடு இணைந்திருக்க என் ஆசிகள்.

அருட்தந்தை. ரி.கிங்ஸ்லி றொபட்
மறைமாவட்ட குருமுதல்வர்,
மேய்ப்புப்பணி நிலையம்,
உப்புவெளி,
திருகோணமலை.

## அப்போஸ்தலிக்க கார்மேல் சபை



விதைப்பவர் ஒருவர் விதைக்க சென்றார் சில விதைகள் நல்ல நிலத்தில் விழுந்தன. அவற்றுள் சில நூறு மடங்காகவும் சில அறுபது மடங்காகவும் சில முப்பது மடங்காகவும் விளைச்சலைக் கொடுத்தன.."

"அப்போஸ்தலிக்க கார்மேல்சபை "எனும் சிறிய விதையானது அன்று (அன்னை வெரோணிக்கா) சோ.ஃபி லீவ்ஸ் என்னும் பெண்மணியின் இதயத்தில் விதைக்கப்பட்டது. இவர் பிரான்ஸ் நாட்டிலுள்ள கொன்ஸ்ரான்டினொபிள் எனும் இடத்தில் அங்கிலிக்கன் குடும்பத்தில் மூத்தபுதல்வியாக 01.10.1823ல் பிறந்தார். சிறந்த பண்புகளுடனும் நல் ஒழுக்கத்துடனும் வளர்க்கப்பட்டு வந்த இவர் கத்தோலிக்க தேவாலயங்களை தரிசிக்க சென்றபோது ஏதோ ஒன்று தங்கள் மதத்தில் குறைவுபடுவதை உணர்தார். இவள் தனது தங்கையுடன் இணைந்து உண்மையைத் தேடியறிய முயன்றவேளையில் கத்தோலிக்க சமயத்தில் தேவ நற்கருணையிலுள்ள உண்மையான கடவுளின் பிரசன்னத்தின் பால் ஈர்க்கப்பட்டு மாசி 2ம் திகதி 1850ம் ஆண்டு கத்தோலிக்க சமயத்தைத் தழுவிக்கொண்டார். செப வாழ்வினாலும் தன் வாழ்க்கையை யுவதிகளுடய, இளம் பெண்களுடைய கல்வி வளர்ச்சிக்காகவும் அர்ப்பணிக்க வேண்டும் என்ற ஆர்வத்தினால் தூண்டப்பெற்ற இவர் தூயசூசையப்பர் கன்னியர் மடத்தில் இணைந்து மேரி வெரோணிக்கா (Marry Veronica Of Passion) எனும் பெயரை எடுத்து புரட்டாதி மாதம் 14ம் திகதி 1951ம் ஆண்டு ஒரு துறவியானார்.

தூய சூசையப்பர்சபை துறவியாக இந்தியாவிற்கு பணி செய்ய வந்த இடத்தில் கார்மேல் சபையை சார்ந்த ஆயர் Marlie Aphrem ஐ சந்திக்க நேர்ந்தது. ஏழைகளுக்கு கல்வியறிவை வழங்கி அவர்களை முன்னேற்ற வேண்டுமென்ற பணியார்வத்தினால் தூண்டபெற்று. இப் பணியை முன்னெடுப்பதற்காக பெண்களுக்கான புதிய கார்மேல் சபையை உருவாக்க வேண்டுமென கனவு கண்டார். இச் சபையை ஆரம்பிப்பதற்கு தகுந்த நபர் அருட்சகோதரி மேரி வெரொணிக்கா என்பதை கடவுளின் அருளினால் அறிந்த இவர் கடவுளின் திட்டத்தை அருட்சகோதரிக்கு எடுத்து கூறினார். அழைப்புக்குள் ஒரு அழைப்பு பெற்ற இவர் ஆயரின் வழிகாட்டுதலின் கீழ் தனது புதிய பணியை ஆரம்பிப்பதற்காக பல சிரமங்கள் போராட்டங்களுக்கு பின்பு பிரான்சிலுள்ள Pay எனும் இடத்திலுள்ள கார் மேல் சபையில் (O.C.D) நவச்சந்நியாசியாக (Novice) நுழைந்தார். கார்மேல் சபைத் துறவியாக பின் சில இளம் பெண்களை இணைத்துக்கொண்டு பல தரப்பட்ட சவால்களுக்கு மத்தியில் கார்மேல் சபையின் மூன்றாவது கிளையாகிய அப்போஸ்தலிக்க கார்மேல் சபையை ஆரம்பித்தார். இவ் அப்போஸ்தலிக்க கார்மேல் சபையானது 1868ம் ஆண்டு பிரான்ஸ் Bayonne ல் அன்னை வெரோணிக்காவால் நிறுவப்பட்டது. இச் சிறிய சபையானது மீண்டும் இந்தியா மண்ணில் 1870ம் ஆண்டு வேரூன்றப்பட்டது. இங்கே இச்சபையானது வடக்கு தெற்கு கிழக்கு மேற்கு என எல்லா திசைகளிலும் தனது கிளைகளை பரம்பியது.



**"நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்"** என எண்ணி ஆர்வத்துடன் பணியாற்றி வந்த வேளையில் இலங்கை ஆயரின் வேண்டுகோளிற்கிணங்க கல்வி பணியை ஈடு செய்வதற்காக அப்போஸ்தலிக்க கார்மேல் சபையினர் இயற்கை எழில் மிகுந்த இடமான திருகோணமலை மறை மாவாட்டத்தில் முதல் தடம் பதித்தனர். எனவே திருமலையிலுள்ள தூயசூசையப்பர் கன்னியர் மடமானது இலங்கையில் ஆரம்பிக்கப்பட அப்போஸ்தலிக்க கார்மேல் சபையின் முதலாவது மடமாக திகழ்கின்றது. திருமலையிலிருந்து பல இடங்களுக்கும் பரவிய இச் சபையானது இன்று 37 கிளைகளை இலங்கையில் பரப்பியுள்ளது.

கார்மேல் சபை செபத்திலும் தியானத்திலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்துகின்றது. அப்போஸ்தலிக்க கார்மேல் சபை செப தியான வாழ்க்கையோடு, கற்பித்தல் பணியை முன்னெடுத்துச் செல்கின்றது. அத்துடன் வீடுகள், நோயாளர்கள், சிறைச்சாலையிலுள்ளவர்களை சந்தித்தல் அநாதைகள், வசதி குறைந்த மாணவர்களை விடுதியில் வைத்துப் பராமரித்தல் முதியோர்களை பராமரித்தல், உளவியல் ரீதியான உதவிகளை செய்தல் முன் பள்ளிகளை நடாத்துதல் பங்கு பணிகளில் ஈடுபடல் போன்ற பணிகளைச் செய்கின்றது. இச் சபையானது 6 மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு தற்போது மாகாண தலைவியாக இருக்கும் அருட்சகோதரி சுசிலாவின் தலைமையின் கீழ் பெங்கரிலிருந்து (இந்தியா) நிர்வகிக்கப்படுகின்றது.

அப்போஸ்தலிக்க கார்மேல் சபையானது கார்மேல் சபையின் ஒரு கிளையாக இருப்பதால் கார்மேல் அன்னையை தங்களது பாதுகாவலியாக கொண்டு யூலை 16ம் திகதி அனைத்து கார்மேல் குடும்பத்துடனும் இணைந்து தமது திருவிழாவைக் கொண்டாடுகின்றது. ஒரு சிறிய விதையாக பிரான்சு நாட்டில் விழுந்த அப்போஸ்தலிக்க கார்மேல் எனும் விதை முளைத்து பெரிய மரமாகி தனது கிளைகளை இந்தியா இலங்கை பாக்கிஸ்தான் ஆபிரிக்கா, குவேத், பாரேன், உரோமை, பிரான்சு ஆகிய இடங்களில் பரப்பி கல்வி பணியை முதற் பணியாக கொண்டு அன்னை வெரோணிக்காவின் கனவினை நனவாக்கும் விருட்சமாக விளங்குகின்றது.

தகவல்: தூய சூசையப்பர் மடம்
திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயர்த்துவப் பணியில்

# ஒரு வருட விசேட சேவை

எமது திருமலை மறைமாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்குரிய கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்கள் ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டு ஒரு வருட பூர்த்தி எதிர் வரும் 2016 ஆடி மாதம் 25ம் திகதியாகும் எப்படி ஒரு வருடம் பூர்த்தியாகியது என்று ஒருவரும் நினையா வண்ணம் நாட்கள் உருண்டோடிற்று. இக் காலகட்டத்தில் புரிந்த சேவைகள் எத்தனையோ, சவால்களுக்கு முகம் கொடுத்து தனது கிறிஸ்தவ சேவையை செல்வனே புரிந்துள்ளார் புரிந்து வருகின்றார். யாரும் எந்த விடயத்தைக் கதைத்தாலும் புன் சிரிப்புடன் செவிமடுத்து ஆயத்துவக் கடமைகளைப் புரிந்து வருகின்றார். இவ் ஒரு வருடகாலத்திற்குள் பாதிக்கப்பட்ட எத்தனையோ வணக்கஸ் தலங்ளைப் புனருத்தாபனம் செய்துள்ளார். பின் தங்கிய கிராமங்களில்கூட உள்ள கோவில்களுக்குச் சென்று மக்களுடன் அன்பாக கதைத்து அவர்களது கருத்துக்களுக்குச் செவிமடுத்து மாணவர் மட்டில் அவர்களது கல்விக்கான உதவிகள் பல புரிந்தும் பங்கின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இலைமறைகாய் போல செயற்பட்டு வருவது எமது மறைமாவட்டத்திற்குக் கிடைத்த பெருமையெனக் கூறவேண்டும்.

எமது திருத்தந்தையின் பணிப்புரையின் பேரில் எமது மறை மாவட்டத்தில் உள்ள சகல பங்கு கோவில்களில் அமைதியில் நற்கருணை ஆண்டவரின் 24 மணிநேர சந்திப்பு இடம் பெற்றது. அதன் சிறப்பம்சம் என்னவென்றால் எமது ஆயர் சகல பங்குகளுக்கும் சென்று வழிபாட்டில் கலந்து கொண்டமை மேலும் அனைத்து குருமார் துறவறத்தோர் மட்டில் அவர்களது ஆன்ம நலன்வேண்டி ஜீன் மாதம் 03ம் திகதி காலை 10.00 மணிக்கு சகல பங்கு கோவில்களில் மட்டுமல்ல கத்தோலிக்க நிறுவனங்களிலும் செபதியானத்தில் ஈடுபட வைத்து உறவை வளப்படுத்தும் நிகழ்வை நடாத்தி வைத்தமை பாராட்டத்தக்க விடையமாகும். சர்வ மதச் சூழலிலும் கூட இன மத ஒற்றுமைக்காக் குரல் கொடுக்கும் கருவியாய் பங்கேற்று வருகின்றார். இவ்வொரு வருடத்தில் அவருக்கு வந்த சாவல்களுக்கு முகம் கொடுத்து மலை போலான விடயங்களை பனிபோலாக்கி தனது சேவையினைப் புரிந்து வரும் எமது மறைமாவட்ட ஆயர் வண கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களது பணி சிறக்க அவருக்கு வேண்டிய உடல் உள ஆரோக்கியத்தை கொடுத்து வளர்ச்சிக்கான பாதையில் செல்லவும் மேலும் அவருக்கு பக்க பலமாகச் செயற்படும் அனைத்துக் குருக்களும் குழந்தை இயேசுவின் பெயரால் நல்ல சேவைகளைப் புரிய வாழ்த்துகூறும்.

- அந்தோனிப்பிள்ளை

அ.இ..ச.நீ

# வரம் ஒருவரம் கேட்போம்

**பங்கேற்பு**

- நற்செயல்களைச் செய்யக்கிடைக்கும் வாய்ப்புக்களை நழுவ விடாதே.
- தோல்விகளைக் கண்டு பயப்படாதே.
- எவ்வித எதிர்பார்ப்புமின்றி நற்செயல்கள் செய்ய உன்னை அர்ப்பணி.
- நல்ல அணுகுமுறையோடு உன் கடமையைச் செய்.
- உன்னால் இயன்ற உதவிகளைத் தாராளமாகச் செய்.
- பிறரோடு ஒத்துழைத்து குழு வேலைகளைச் செய்.
- எந்தச் செயலிலும் முழு மனதோடு ஈடுபட்டு உன் ஒத்துழைப்பை பொருளுள்ளதாக்கு.

**மன்னிப்பு**

- பிறருடைய நிலையில் உன்னை நிலைப்படுத்தி அவர்களின் மூலம் உன் சூழ்நிலையை அறிந்துகொள்.
- குடும்பவாழ்வு வளம்பெற ஒருவர் ஒருவரை மன்னித்து ஏற்றுக்கொள்.
- நீ தவறு செய்துள்ளாய் என்று உணரும் போது மன்னிப்புகேட்கத் தயங்காதே.
- மன்னித்து மறக்கக் கற்றுக்கொள்.
- ஒருவர் மீது நீ கோபம் கொள்ளும்போது அவர்கள் செய்த நன்மையை நினைத்தால் உன்னால் மன்னிக்க இயலும்.
- சூழ்நிலை மாறுவதற்கு முன் மன்னித்துவிடு.
- மன்னிக்கும் மனநிலையுள்ளோரைப் பாராட்டி அவர்களைப் பிற்பற்று.

**நேர்மை**

- மனசாட்சிக்கு ஏற்ப உன் கடமையைச் செய்.
- கடவுளின் பார்வையில் உன் எண்ணங்கள் தூய எண்ணங்களாய் இருக்கட்டும்.
- நேர்மையை குழந்தைகளுக்குக் கற்றுக்கொடு. அவர்களின் நேர்மையான உடல், உள வளர்ச்சியில் கவனம் செலுத்து.
- நன்மை செய்ய எவ்வழியிலும் சாலச்சிறந்தோரை நாடு.
- நற்செயலாக்கம் பெற்ற செயலைப் பாராட்டு.
- இலஞ்சம், வரதட்சணை, கொடுமை இவைகளைத் தவிர்க்கும் நடவடிக்கைகளில் துணிந்து செயல்படு.

**நன்றி கூறுதல்**

- நீ பெற்றுக் கொண்ட வரங்களுக்கு கடவுளுக்கு நன்றிசொல்.
- நல்ல நண்பர்களைத் தந்த கடவுளுக்கு நன்றி சொல்.
- உனது குடும்ப உறவுகளின் மதிப்பை உணர்ந்து கடவுளை வாழ்த்து.
- துன்பத்திலும், கவலையிலும் கடவுளுக்கு நன்றி சொல்.
- நீ உண்ணும் உணவிற்கு கடவுளுக்கு நன்றி கூறு.
- படுப்பதற்கு முன்னும் எழுந்து பின்னும் கடவுளுக்கு நன்றி சொல்.
- உன் பிறந்த நாளைக் கொண்டாடு. புதிய ஆண்டைத் தந்ததற்கு கடவுளுக்கு நன்றி கூறு.

தகவல்: அருட்பணி ஆஞ்சலோ பொன்னையா இ.ச

# சர்வதேச அகதிகள் தினம் - ஆடி-28

மனிதன் பிறக்கும்போது எவரும் அடிமையாகப் பிறப்பதில்லை அடிமையாக்கப்பட்வன் இந்த அடிமை வாழ்வு பழைய ஏற்பாட்டுக் காலத்தில் எகிப்திய மன்னன் பாரவோனால் இஸ்ரேயல் மக்கள் சிறை பிடிக்கப்பட்டு அகதியாக்கப்பட்ட காலத்தில் ஆரம்பமானது அன்றிலிருந்து இது தொடர் கதையாவே நடைபெறும் நிகழ்வாகவுள்ளது.

தற்போது உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் அகதியாக்கப்படுபவர்கள் ஏராளம் வெவ்வேறு வகையில் அகதியாக்கப்படுகின்றனர். இயற்கை சீற்றத்தால் அதாவது புயற்காற்றினால், சுனாமிப் பேரலைகளால், கடும் மழை வெள்ளத்தினால் ஏற்படும் அழிவுகள் இழப்புக்களால் அகதியாக்கப்படுகின்றனர். அதிலும் அர்த்தமற்ற யுத்தங்கள் இதனால் அகதியாக்கப்பட்ட மக்கள் ஏராளம். இவற்றிற்கான காரணம் தான் என்ற அகங்காரத்துடன் மற்றவரைத் துன்புறுத்துவது சகோதரத்தன்மை இல்லை, அன்பு இல்லை, பழிவாங்கல், சுயநலம் போன்ற செயற்பாடே இதற்கு காரணம் தினமும் வானொலிச் செய்தி பத்திரிகையைப் பார்த்தால் யுத்தங்களும் அகதியாக்கலும் மலிந்து காணப்படுகின்றன. இரு மனிதர், குழுக்கல் பிரேதசம், நாடுகளுக்குள் இனத்திற்கு இனம் மத வெறி பிடித்தவர்கள், சாதிகளுக்குள் அதிகார வெறியினால் ஏற்படும் பிரச்சினைகளே அகதி வாழ்க்கைக்கான ஆரம்பம். மனிதன் மனிதனைத் தாக்கி, சமுதாயத்தை நசுக்கி, பிறிம்பாக்கி, நலிந்த மக்களை அடிமையாக வைக்கும் போது மனிதன் அடிமையாகிறான். அத்துடன் சமய வெறியென்ற போர்வையில் வேறு சமயத்தவரைத் தாக்கி அவர்களது உரிமைகளைப் பறித்து, மதவழிபாட்டு இடங்களை அழித்து சமுதாயத்திலிருந்து ஒதுக்கி தூரத்தப்படுபவர்கள் ஏராளம்.

இப்படியான அகதி மக்களைப் பாதுகாத்து பராமரிக்க சர்வதேசமே அகதிகளுக்கான தினமாக ஜீலை 28ம் திகதியை பிரகடணப்படுத்தியுள்ளார்கள். இம் மக்களைப் பாதுகாக்க முகாம் அமைத்து உடனடித்தேவைப் பொருட்களை உணவு உடை வழங்கியும் குடியேற்றும் வேளையிலும் வீடுகள் அமைத்துக் கொடுத்தல் U.N.H.C.P எனும் பெயரில் நிறுவனமும் சுகவீனப்பட்டோர் காயப்பட்டோருக்கான நிறுவனமாக I.C.R.C எனும் பெயரில் இயங்கியும் பாடசாலைச் சிறார்களுக்கு கற்றல் உபகரணங்கள் யாவும் வழங்கியும் சேதமடைந்த பாடசாலைகளைக் கட்டியும் சகல வசதிகளையும் செய்து கொடுக்க UNICEF மூலமும் இயங்கி பாரிய சேவைகளைப் புரிகின்றனர். இது போன்ற மனிதாபமுள்ள உன்னத சேவைகளை புரியும் நல்ல என்னம் கொண்ட மக்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். யுத்தங்களின் போது தங்கள் உயிரைப் பயணம் வைத்து மக்களைப் பாதுகாக்க உணவுகள் வழங்கச் சென்று எத்தனை தொண்டர்கள், குருமார், மததலைவர்கள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள் அகதிகளுக்கு உதவி செய்வதற்கான சன்மானம் தான் இந்த உயிரிழப்பு.

இவைகளுக்குக் காரணம் மக்களிடையே மனிதநேயம் இல்லை, சகோதரத் தன்மை இல்லை, அன்பு இல்லை, மனித மாண்புகள் சிதைக்கப்படுகின்றவையே ஆகும். ஒரு மனிதன் அகதியாக்கப்பட்டால் தான் அகதி வாழ்க்கையின் அவலம் என்ன வென்று அறிவர் இந்த அகதி வாழ்க்கை மாறுவதனால் ஒவ்வொரு மனிதனும் பிறரன்பு கொண்டு மற்றவரது எண்ணங்களுக்கு மதிப்பளித்து, மனிதம் காத்து, மனித நேயம் வளர்த்து மன்னிக்கும் மனத்தோடு அயலாருடன் விட்டுக் கொடுப்பு புரிந்துணர்வுடன் சகல மக்களும் வாழ்ந்தால் காலப்போக்கில் பகைமை மறைந்து சமாதானமாக வாழக்கூடிய சூழ் நிலை உருவாகும்.

இது உலகளாவிய நிலைக்குப் பரப்படுமாயின் இந்த அகதி என்ற வார்த்தை இல்லாமல் போகும் என்பது திண்ணம். இதனால் நாடு சுபீட்சம் பெற்று அபிவிருத்தியடைந்த நாடாக மாறும்

ஆக்கம் : S.A ஜோதி

# குட்டிக் கதை ஒன்று...

Fr.N.C...

ஒரு பாடசாலையில் தரம் ஐந்திலே பல மாணவர்கள். அதிலே பல மாணவர்களும் பல நிலைகளிலே தங்கள் திறமைகளை காட்டிக் கொண்டிருப்பார்கள். அதிலே ஒரு மாணவன் எல்லா நிலைகளிலும் கூடிய நாட்டத்தைக் காட்டுவான் அது படிப்பாக இருக்கலாம் வேலையாக இருக்கலாம் விளையாட்டாக இருக்கலாம் எதுவாக இருந்தாலும் சோர்வென்பதே தெரியா மல் சிரித்துக்கொண்டே செய்துமுடிப்பான். ஆசிரியர் பலருக்கும் அவனது செயல்கள் பிடித்திருந்தது.

விளையும் பயிரை முளையிலே தெரியும் என்பதை ஆசிரியர்களே உணர்ந்து கொண்டார்கள். அவர்களின் உணர்வுகளும் உண்மைதானே.

☞ 8ம் பக்கத் தொடர்ச்சி

**பாலையூற்று தூய லூர்து அன்னை ....**

அருட்தந்தை ஜீவனதாஸ் பேர்னாண்டோ (அ.ம.தி), அருட்தந்தை அந்திரியாஸ் பேர்னாண்டோ (அ.ம.தி) ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் குவாடலூப்பே பங்கைச்சேர்ந்த திரு. சு.பத்மராஜா அவர்களும் பாலையூற்றில் அவரது சேவையினை முன்னிட்டு கௌரவிக்கப்பட்டார்.

இறுதியில் அருட்தந்தையர்கள் ஒன்றிணைந்து நடத்திய "தொடர்புசாதனங்கள் இறைநம்பிக்கையினை வளர்க்கின்றன, வளர்க்கவில்லை" என்ற தலைப்பில் பட்டிமன்றமும் நடைபெற்றது.

தகவல்: திருமதி. அன்டனிதாஸ் சகாயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகதி முகாம்களிலே...

அருட்பணி. N.C அருள்வரதன்

வாழ்ந்த ஒரு காலம்
வளங்கள் கண்ட நேரம்
சிறந்து ஓங்கியே வாழ்வில்
சிறப்புக்கள் கண்ட வேகம்
மறைந்தே கலைந்தவைகள்போக
நிறைந்ததே வாழ்விலே
துயரங்கள் தானே

ஒடுக்கப்பட்ட நிலைகளிலே
உரிமைகளெல்லாம்
பறிபோகவே
உதவும் கரங்களின்
துணைகளின்றியே
அடிமையின் நிலைகளிலே
முகாம்களிலே அவலங்கள்
பல கதைகள் கூறுமே

ஓடி வந்தே ஒதுங்கியவர்
ஒன்றுமே இல்லையே
கைகளிலே
பசியும் வறுமையும்
பற்றிக்கொள்ளவே
விழிகளால் வழியுமே
கண்ணீர் களங்கே

யுத்தங்கள் தந்து விட்ட
முகாம்கள்
மண்சரிந்து நிலமதிர்ந்து
அழிவுகளால் ஏற்பட்ட
முகாம்கள்

உலகளாவிய கொடுமைகள்
உருவாக்கிய முகாம்கள்
உருவானது ஒன்றே அவை
எங்குமே துன்பங்களே
எதிலுமே துன்பங்களே
அகதிகளாய்ப் பெயரிடப்பட்டோர்
பரந்து உலகிலே
பரவிக் கிடக்கிறார்கள்
வறுமைப் பிணிக்குள்
வாடிக்கிடக்கின்றதே வாழ்வு

மறையுமா கலையுமா என
நினைந்தே காலங்களை
கழித்து விட்ட போதிலும்
இன்னும் முகாம்கள்
இருப்பதை நினைத்தால்
பெருகிவரும் துயரங்களை
பெருக்கெடுக்கும் கண்ணீரை
நிறுத்தியே புது வாழ்வை
நிலை கொள்ளச் செய்வதற்கு
வழிகள் பிறக்க வேண்டும்
வழிகள் பிறப்பதற்கு
வழிவகுப்போர் முன்வந்து
வெற்றிகள் காண வேண்டுவோமே.

## அம்மா



பத்துத் திங்கள் என்னை
பக்குவமாய் சுமந்தவளே
பாலாய் உன் உதிரத்தை
பரிவுடனே பகிர்ந்தவளே

கருவறையில் எனைச் சுமந்து - என்
கண்ணீர் துடைத்தவளே
கருணைக்கு சாட்சி சொல்ல - உன்
கண்ணீரே போதுமம்மா

மார்போடு எனையணைத்து
மடி சுமந்த உன் உறவு
மறந்தே தான் போயிடுமோ
மாண்டாலும் விலகிடுமோ

எல்லையில்லா உன் அன்பும்
முடிவில்லா நம் உறவும்
தொப்புள் கொடி சொந்தமன்றோ
தொடரும் இந்த பந்தமன்றோ

அம்மா என்ற ஒரு வார்த்தை
அகிலத்தையே அடக்கி விடும்
அன்பென்ற ஒரு சொல்லின்
அச்சாணி ஆகிவிடும்

ஆள்பவன் ஆனாலும்
ஆண்டவனே ஆனாலும்
அடங்குவதும் அடம் பிடிப்பதும்
அன்னை உன் முன் அன்றோ.

ஆக்கம்:
*செல்வி. எ. டிலானி*
*தூய வனத்து அந்தோனியார் ஆலயம்,*
*செல்வநாயபுரம்.*

## முதல் வருடத்தின் வாழ்த்தொலி

* இரக்கத்தையும் நீதியையும் குறித்து பாடுவேன்
ஆண்டவரே உமக்கே புகழ் சாற்றிடுவேன்
எண்ணற்ற மகிழ்வுடன் பணிதனையும் ஏற்று
ஓராண்டு நிறைவையும் கண்டீரே

* பல சவால்களையும் குப்பையென கருதி
ஆண்டவன் பணியிலே கருத்தானீர்
நேரிய வழியில் வாழ்வுதனை வாழவே
துணையாக ஆண்டவனைத் தேடினீர்



* ஆண்டவருடைய கனிவான செயல்கள்
என்றும் மாறாத உங்கள் வாழ் நாளை
நலன்களால் நிரப்பி உங்களை
நிறைவுறச் செய்து மகிழ்கின்றார்

* உங்கள் இதயத்தின் மௌனமொழிகளையும்
இரக்கத்தின் இறைவன் கேட்கின்றார்
பணி வாழ்வின் படிக்கற்களாக அமைய
இறைபயணங்கள் ஒவ்வொன்றும் துணையானதே.

* திருச்சபைக்கு உரம் போடவும்
மனித மாண்புகளை நேசிக்கவும்
ஐந்தாண்டு திட்டமதை திட்டமிட்டு
இரவு பகல் என்றில்லாது பணியாற்றுகிறீர்

* நல் மேய்ப்பனே நல்லாயனே-உங்களை
வாழ்த்து சொல்லி வாழ்த்துகின்றேன்-என்றென்றும்
இரக்கத்துடன் அன்பு பணியாற்றவும்
இறைவன் பால் வரம் வேண்டி வாழ்த்துகின்றேன்.

கு.சுபா. பாலையூற்று.

## குவலயம் குதூகலிக்கும்

அன்பின் மகனே மகளே
என்னை மகிழ்வுறச் செய்தீர்கள்
திருகோணமலை மறைமாவட்ட
செபமாலைப் பேரணி மகாபேரணி
மரியே வாழ்க என்றீர்கள்
தாயே மரியே என்றீர்கள்
தஞ்சம் நீரே என்றீர்கள்
பாதைகளூடாக பதாதைகளைப்
பார்த்தோர் என் மீது
பக்திப் பரவசமாயினர
மனமது மகிழ்ந்தேன்



அன்று எனக்கு
கபிரியேல் தேவதூதன்
மங்கள வார்த்தை கூறினார்
அதுவும் மகிழ்ச்சி
இதுவும் மகிழ்ச்சியே

மங்கள வார்த்தை கேட்ட நான்
உங்களுக்காக எனது மகன்
இயேசுவைத் தந்தேன் -அவர்
உங்களை பாவத்திலிருந்து மீட்டருளினார்.

எனக்காக செபமாலை பேரணி
ஆயருடன் அருட்பணியாளர்கள்
அனைத்து சபை சகோதரர்கள்-ஏன்
சகோதர மதத்தவரும்
கை கூப்பி வணங்கி நின்று
கட்டியம் கூறினரே

திருமலைத் தீபம் என் புகழை
திக்கெட்டும் பரப்பியதே
மகனே மகளே உங்களுக்காக
பிதாவாகிய நம் சர்வேசுரனிடம் பரிந்து
பேசுகின்றேன் பேசுகின்றேன்
மணி மணியான செபமாலை
மகத்துவமானதே

உங்களது ஆன்மீக வாழ்வு
மருந்தாகும் மாலை செபமாலையே
குடும்ப உறவுகள் சேர்ந்து
செபமாலை சொல்லுங்கள்
குடும்பத்தில் அமைதி நிலவும்
குடும்ப தேவைகள் நிறைவேறும்
குடும்ப தேவைகள் நிறைவேரினால்
குவலயம் குதூகலிக்கும்

கலைக் கோட்டன். அ.இருதயநாதன்

## நினைந்து வேண்டுவோம்


மலையக மண்ணிலே பிறந்து
கிழக்கிலே பணியாற்றிய எங்கள்
அருட்சகோதரர் மத்தியூ அவர்கள்
கல்வியில் சிறந்தோங்கி
கற்பித்த ஆசான்
கணிதமோ விஞ்ஞானமோ ஆங்கிலமோ
எப்பாடமென்றாலும்
கற்பிக்கு மாற்றல் கொண்டவர்
கற்பித்துச் சாதனைகள் படைத்தவர்
கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியில்
அதிபராய் இருபத்திரெண்டு ஆண்டுகளை
குறைகளின்றிப் பணிகளாற்றி
பேதங்களின்றி மனங்களிலே
இடங்களைப்பிடித்த பெருந்தகையாம்
காலம் அவரை அழைத்தபோது
கண்மூடி மறைந்த
அருட்சகோதரர் மத்தியூ அவர்களை
இறைவனின் பாதம் சென்றடைய
அவரின் ஆன்ம சாந்திக்காய் வேண்டுவோம்
ஒருமித்த குரலாய் ஒன்றித்து வேண்டுவோம்

*திருமலைத்தீபம்.*





## இரக்கத்தோடு வாழ எட்டு வழிகள்...



01. அக்கறை கொள்ளுங்கள்
02. தீர்ப்பிடாதீர்கள்
03. புறணி பேசாதீர்கள்
04. பழிக்குப்பழி வாங்காதீர்கள்
05. இரக்கம் காட்ட மறுக்காதீர்கள்
06. சிறு சிறு இரக்கச் செயல்களில் கவனம் செலுத்துங்கள்
07. பிறரிடமிருந்து இரக்கத்தை ஏற்றுகொள்ளுங்கள்
08. இரக்கத்திற்காக மன்றாடுங்கள்

"இரக்கமுடையோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்"

## பகைவரிடம் அன்பு செலுத்துங்கள்...

1832ம் ஆண்டில் பாரிசில் காலரா நோய் பரவியிருந்தது. அச்சயத்தில் பிறரன்புச் சபையின் அருட்சகோதரி மரி அவர்கள் மருத்துவமனைக்குச் சென்று உதவி வந்தார். ஒரு நாள் அம் மருத்தவமனை பணியாள் ஒருவர் அச் சகோதரியை கெட்ட சொற்களால் மிக கேவலமாகச் சப்தமாகத் திட்டி கொண்டே இருந்தார். அச் சகோதரியும் எதுவும் நடக்காதது போல் பணியை முடித்துவிட்டு போய்விட்டார். சில நாட்கள் சென்று அம் மருத்துவ மனைக்குப் புதிதாக நோயாளர் ஒருவர் கொண்டுவரப்பட்டார். ஏற்கனவே அம் மருத்துவமனையில் நூற்றுக்கணக்கான காலரா நோயாளர்களால் நிறைந்திருந்தது. ஒவ்வொரு சில நொடிகளுக்கும் ஒருவர் இறந்து கொண்டிருந்தார். இதனால் புதிதாகக் கொண்டு வரப்பட்ட நோயாளர்களுக்கு இடமில்லை. தற்செயல்லாக அவ்விடம் வந்த அருட்சகோதரி மரி அந்த நோயாளரை அடையாளம் கண்டு கொண்டார். தயவு செய்து அவரைத் திருப்பி அனுப்பாதீர்கள். ஏதாவது மூலையில் ஓர் இடம் கண்டுபிடித்து, அவரை நான் கவனித்து கொள்கிறேன் என்றார். அந்த நோயாளரும் அனுமதிக்கப்பட்டார். அச்சகோதரி தான் பராமரித்து வந்த மற்ற நோயாளருடன் இவரையும் மிகுந்த அன்புடன் பராமரித்தார். எட்டு நாட்கள் சென்று ஆபத்தான நிலையை கடந்தார் அந்த நோயாளி. அப்போது அவர் தன் அருகில் புதிய செவிலியர் ஒருவர் இருப்பதைப் பார்த்தார். அவரிடம் அந்த நோயாளி அருட்சகோதரி மரி எங்கே என்றார். அருட்சகோதரி மரி காலராவால் தாக்கப்பட்டு இந்த இரவில் தான் இறந்தார் என்றார் செவிலி. **இது இரக்கத்தின் காலம்.**

ஆதாரம்: வத்திக்கான் வானொலி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மறைமாவட்ட ரீதியில் நடைபெற்ற விவிலிய அறிவு நாடகப்போட்டி முடிவுகள் -2016

## விவிலிய அறிவுப்போட்டி – 2016

**18.06.2016 அன்று நடைபெற்ற மறைமாவட்ட விவிலிய அறிவுப் போட்டி முடிவுகள் வருமாறு**


### தமிழ்ப் பிரிவு

**தரம் 6-8 கீழ்ப்பிரிவு**

1ம் இடம் - பாலையூற்று (அன்புவழிபுரம் பங்கு)
2ம் இடம் - பேராலயப் பங்கு
3ம் இடம் - இருதயபுரம் பங்கு

**தரம் 9-11 மேல்ப்பிரிவு**

1ம் இடம் - பேராலயப் பங்கு
2ம் இடம் - குவாடலூப்பே (பள்ளத்தோட்டம்) பங்கு
3ம் இடம் - பாலையூற்றுப் பங்கு



### சிங்களப் பிரிவு

**தரம் 6-8 கீழ்ப்பிரிவு**

1ம் இடம் - பாலையூற்றுப் பங்கு
2ம் இடம் - கந்தளாய்ப் பங்கு
3ம் இடம் - சீனக்குடா (ஆண்டாங்குளம்) பங்கு

**தரம் 9-11 மேல்ப்பிரிவு**

1ம் இடம் - சீனக்குடாப் பங்கு
2ம் இடம் - சீனக்குடா (ஆண்டாங்குளம்) பங்கு



**பங்குபற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்களும் நன்றிகளும் இப் போட்டியில் 1ம்,2ம்,3ம் இடங்களைப் பெற்றவர்கள் தேசிய ரீதியிலான போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.**

## நாடகப் போட்டிகள் – 2016

**04.06.2016 அன்று நடைபெற்ற மறைமாவட்ட விவிலிய நாடகப் போட்டி முடிவுகள் வருமாறு**

### தமிழ்ப் பிரிவு


1ம் இடம் - உவர்மலைப் பங்கு
2ம் இடம் - இருதயப்புரப்பங்கு
3ம் இடம் - குவாடலூப்பே (பள்ளத்தோட்டம்) பங்கு

### ஆங்கிலப் பிரிவு

1ம் இடம் - உவர்மலைப் பங்கு (ஒரு குழுவினர் மட்டும் கலந்து கொண்டனர்.)

### சிங்களப் பிரிவு

1ம் இடம் - சீனன்குடாப் பங்கு (ஒரு குழுவினர் மட்டும் கலந்து கொண்டனர்.)



**பங்குபற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்களும் நன்றிகளும் இப் போட்டியில் 1ம் இடத்தைப் பெற்ற குழுவினர்கள் மட்டுமே தேசிய ரீதியிலான போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.**

## இரக்கத்தின் ஆண்டு பத்து பரிந்துரைகள்.

- உடல் சார்ந்த ஆன்மா சார்ந்த இரக்கச் செயல்களை மனப்பாடம் செய்க.
- இரக்க செயல்களில் ஈடுபடுக.
- பாடுபட்ட திருச்சிலுவையை உற்று நோக்கி இயேசுவின் இரக்கத்தை உணர்ந்து நன்றி கூறுக.
- இறை இரக்கத்தை பெற்றுக் கொள்ள ஒப்புரவு அருள் அடையாளத்தை அடிக்கடி பெறுக.
- இரக்கத்தின் வாயில்கள் திறக்கப்பட்டுள்ள ஆலயங்கள் நோக்கி திருப்பயணத்தை மேற்கொள்க.
- ஆண்டவருக்காக 24 மணிநேரம் சிறப்பு வழிபாட்டில் பங்கு கொள்க.
- இரக்கத்தின் நற்செய்தி என அழைக்கப்படும் லூக்கா நற்செய்தி நூலிலிருந்து வாசிக்கப்படும் ஞாயிறு வாசகங்களை கவனமுடன் கேட்டு சிந்தித்து செயல்படுக.
- இரக்கத்தின் திருப்பாடல் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து தினமும் மன்றாடுக.
- ஒரு புனிதரைத் தேர்ந்தெடுத்து அவர் எவ்வாறு இரக்கத்தின் கருவியாய் இருந்தார் என்பதை தெரிந்து கொள்க.
- இரக்கத்தின் யூபிலி ஆண்டு செபம் மிகவும் இரக்கமுள்ள தாயே செபம் இறை இரக்கத்தின் செபமாலை மன்றாடுக.

**இறக்கதான் பிறந்தோம். ஆனால் இருக்கும் வரை இரக்கத்தோடு வாழ்வோம்.** (அருளாளர் அன்னை தெரேசா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரக்கத்தின் ஆண்டு சிறப்புப் போட்டிகள்

## கவிதையைக் காட்சியாக்குவோம்

FR. Nc...

- மரங்களும் இணைந்த மலைகளங்கே
- கடல்களும் மலைகளை வருடிவர
- படகுகள்சிலவும் தெரிகிறதே
- மலையின் மேலே மேகங்கள்
- நகர்ந்தவை மெதுவாய்ச் செல்லவே
- கரைமீது தெரிகின்றமரங்களிலே
- கண்கவர் மலர்களும் நிறைந்திருக்க
- காய்கள் நிறைந்த தென்னைகளும்
- கவரும் காட்சியாய் தெரிகின்றதே

- ஒன்பது வரிக் கவிதைகளை
- வரைந்து காட்சியாய் வடிவமைப்போம்
- எட்டிய மட்டும் பட்டென படமாய்
- A4 தாளின் வரையுங்கள்
- போட்டியில் எல்லோரும் கலக்கலாம்
- பொலிவாக வரைந்தோர்க்கு
- பரிசுகள் உண்டு
  - 1ம் இடம் 400ரூபா
  - 2ம் இடம் 300ரூபா
  - 3ம் இடம் 200ரூபா
- வரையும் ஆற்றலை வெளிக்காட்ட வாய்ப்பு
- வரையுங்கள் பார்ப்போம்
- முடிவுத்திகதி 10 08 2016

## இரக்கத்தை நினைவூட்டும் மாணவர்களுக்கான சிறப்புப்போட்டி

FR. Nc...

- இரங்கிடும் இதயங்கள்
- கனிவான நிலையினைக்காட்டியவை
- கலங்கிடும் கண்களின் துயர் நீக்கியே
- துயர்களைக்கண்டு துணை செய்யுமே
- புதிதான வாழ்வுக்கு வழிசமைக்க
- பெரிகிடும்போது அவை
- பொங்கியே இதயங்கள் மகிழ்ந்திடுமே

- கவிதை வரிகள் ஏழு
- எல்லா மாணவரும் கலந்துகொள்ளலாம்
- வேறு ஒரு தாளில் நிரைப்படுத்தி அனுப்ப வேண்டும்
- எல்லோரும் சரியாக வடிவமைத்தால்
- குலுக்கல் மூலம் வெற்றியாளர்கள் தெரிவார்
- குறைந்த எண்ணிக்கையானோர் மட்டும் சரியாக வடிவமைத்தால்
  - 1ம் இடம் 400ரூபா
  - 2ம் இடம் 300ரூபா
  - 3ம் இடம் 200ரூபா
- கூடியவர்கள் சரியாக வடிவமைத்தால்
- அதிஸ்ரசாலிகள் ஐந்து பேருக்கு தலா 300ரூபா
- சரியாக வடிவமைத்து பரிசுகளைப் பெறுங்கள்
- பெயர் முகவரி பங்கை இத்துடன் இணைத்து அனுப்பவும்
- முடிவுத்திகதி 10.08.2016

## சிறுவர்களுக்கான நிறம் தீட்டும் போட்டி முடிவுகள்

பங்கு பற்றியவர்கள் :14

பரிசுக்குரியவர்கள்

1ம் பரிசு 500/=ரூபா
செல்வன். தேவதாஸ் ஜெனுக்சன்.
6ம் கட்டைபெரிய குளம்,
நிலாவெளி,
சாம்பல் தீவு.

2ம் பரிசு 300/=ரூபா
செல்வி. அ.பிரசாத் பிரவீனா.
இல:164/2, லோவர் வீதி,
உவர்மலை.

3ம் பரிசு 200/=ரூபா
செல்வன். ஜே.ஷினுவ்,
மின்சார நிலைய வீதி,
மூதூர் -7.

**பங்குபற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்களும், நன்றிகளும்.**

## வெற்றியைக் காணவே

**சரியான கவிதை வரிகள்**

தீமைகள் நிறைந்த வாழ்வுகளால்
தூய்மைகள் மறைவது உண்மையே ஆனால்
உண்மையும் நேர்மையும் வாழ்வோடு
இணையும் போது வாழ்வினிலே
உயர்வின் மகிமைகளைக் கண்டு கொண்டே
உண்மையின் வெற்றிகளைக் காண்போமே

**பங்கு பற்றியவர்கள் :27பேர்**
**சரியாக வடிவமைத்தவர்கள் : 22பேர்**
**பரிசுக்குரியவர்கள்**

1ம் பரிசு 500/=ரூபா
செல்வன். N.S. ஐதுர்சன்
இல:216/20 சுடரொளி லேன்,
பாலையூற்று.

2ம் பரிசு 300/=ரூபாய்
திரு. ச.டேவிற்பிள்ளை
இல: 68 சகாய இல்லம்,
ஆசிரியர் சதுக்கம்,
உவர்மலை.

3ம் பரிசு 200 /=ரூபாய்
செல்வி ஆன்வஜிராசு. ஆர்.எப்
இல 21/3வித்தியாலயம் வீதி,
திருகோணமலை

**பாரட்டுக்குரியவர்கள்**

| | | |
|---|---|---|
| 01. | ரி. ஜெனிஸ்டன் | - சாம்பல்தீவு |
| 02. | ரி. ஜெரோம் | - சிறியகுருமடம் |
| 03. | மேரி ரொசாணி. பி.ஜே. | - பாலையூற்று |
| 04. | மனோஜ்குமார் க.ஃபினா | - பேராலயம். |
| 05. | டே. மெரிஷியன்பள்ளை | - உவர்மலை |
| 06. | பி.பி. அன்ரனி பெர்னான்டோ | - மன்னார் |
| 07. | யோ. அனஸ்ரி அமலராணி | - அன்புவழிபுரம் |
| 08. | ஜே. லிரொன்ஸ் | - பேராலயம் |
| 09. | டே. நிதிசஸ்வரி | - உவர்மலை |
| 10. | ரிட்சியா | - பேராலயம் |
| 11. | ட. ரக்ஸனா | - உவர்மலை |
| 12. | அ. ஜீவகாந் | - நிலாவெளி |
| 13. | தே. சமில்டன் | - நிலாவெளி |
| 14. | ஜே.புளோரிடா | - பேராலயம் |
| 15. | டிரோன்ஜான்சி | - உவர்மலை |
| 16. | ஜே.ரி. காமலீன் | - மூதூர் |
| 17. | டானியாலா. ஆர்.எப் | - பேராலயம் |
| 18. | ச.டே. வோறன்பிள்ளை | - உவர்மலை |
| 19. | ஏ.பி. துஷாந்தன் | - மூதூர் |

**பங்குபற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்களும், நன்றிகளும்.**

## கவிதைப் போட்டியில் (மலைப்பொழிவு) 2ம் இடம் பெற்ற கவிதை

அயலவரை அன்புடனே **மதித்திடுவாய்**
ஆசையுடன் அவர்குறை **தீர்த்திடுவாய்**
அல்லல்படுவோரை **தேற்றிடுவாய்**
ஆதரவற்றவரை **காத்திடுவாய்**
துன்பப்படும் ஏழை, எளியவரில் **இரங்கிடுவாய்**
சிறையிலிருப்பரை **தரிசிப்பாய்**
நோயுற்றவருக்கு **உதவி செய்திடுவாய்**
பசித்தவருக்கு **பசி போக்கிடுவாய்**
யாருமற்ற குழந்தையை **அரவணைப்பாய்**
விண்ணகப் பாதையை **தேர்ந்திடுவாய்**

ஆக்கம் : தே. சமில்டன்
3ம் வட்டாரம்,
நிலாவெளி

## அறிவித்தல்

உங்கள் அன்புக்குரியவர்களின் பிறந்தநாள், திருமணநாள், இறந்தநாள் ஆகிய வற்றை பிரசுரிக்க வேண்டியவர்கள் எந்த மாதத்தில் பிரசுரிக்க வேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல்மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் தெளிவாக எழுதி எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

### கட்டண விபரம்


| | | |
|---|---|---|
| கறுப்பு வெள்ளை | 1/4 பக்கம் - 2500.00 ரூபா | |
| | 1/2 பக்கம் - 5000.00 ரூபா | |
| கலர் | 1/4 பக்கம் - 3750.00 ரூபா | |
| | 1/2 பக்கம் - 7500.00 ரூபா | |

## திருமலைத்தீப நிர்வாகக் குழுக் கூட்டம்

திருமலைத்தீப நிர்வாகக் குழுக்கூட்டம் 08.06.2016 அன்று பிற்பகல் 3.15 மணியளவில் ஆயரின் தலைமையில் செபத்துடன் ஆரம்பமானது. இக்கூட்டத்திற்கு பங்குகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 08 உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். அத்தோடு மறைக்கல்வி நிலைய இயக்குனரும், பணியாளர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

**நிர்வாகக்குழு உறுப்பினர்கள் வருமாறு :**

* திரு. S.S. அந்தோனிப்பிள்ளை - E.H.E.D நிறுவனம்
* திரு. கிறிஸ்ரி முருகுப்பிள்ளை - ஓய்வுநிலை கல்வி அதிகாரி
* திருமதி. சரோஜினி சிறில் பத்திநாதன் - உவர்மலைப் பங்கு
* திருமதி. மரியதாஸ் ஜெயவதனி - செல்வநாயகபுரம்
* திருமதி. சு. நீற்றா பெர்னான்டோ - பாலையூற்று
* திருமதி. றொ. கெ. மதுரநாயகி - பேராலயம்
* திரு. நாதன் சுரேஸ் - மூதூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி - 18ன் விடைகள்
### திருத்தூதர் பணி அதி 21 - 24 வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆ | சி | யா | வி | லி | ரு | ந் | து | |
| ல் | | ந | ன் | றி | யு | ண | ர் | வோ | டு |
| த | ர் | | ழி | மொ | க | க் | ரே | கி | |
| மு | ட | | து | ன் | சொ | | | | கு |
| தெ | ண் | பே | ரோ | வ | ல் | யா | ப | ரை | ழ |
| த் | தொ | ரொ | ப் | த | ல | சி | ணி | க | ப் |
| ர் | த் | ளி | பி | ந் | ட் | லீ | வி | ற் | ப |
| யி | ரு | | ம் | ற | டு | | டை | ட | ம் |
| உ | தி | | | பி | ம் | | | க | |
| | ன் | க | ம | டி | கு | க் | மை | ரோ | உ |

01. கடற்கரை
02. திருத்தொண்டர்
03. பிறந்தவன்
04. துரோப்பிம்
05. குழப்பம்
06. கிரேக்கமொழி
07. பேரொளி
08. உரோமைக் குடிமகன்
09. நன்றியுணர்வோடு
10. ஆசியாவிலிருந்து
11. உயிர்த்தெழுதல்
12. சொல்லட்டும்
13. லீசியா
14. பணி விடை

## பிறரை தீர்ப்பிடுவதற்கு முன்...



பிறரை தீர்ப்பிடுவதற்கு முன் நாம் எவ்வாறு காணப்படுகிறோம். என கண்ணாடியில் முதலில் பார்க்க வேண்டுமென திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் சாந்த மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் நிறைவேற்றிய திருப்பலியில் கூறினார்.

திருப்பலியின் நற்செய்தி வாசகத்தை (மத்: 7,1-5) மையப்படுத்தி மறையுரையாற்றிய திருத்தந்தை நம் தீர்ப்பிலிருந்து கடவுளின் தீர்ப்பை மாறுபடுத்திக் காட்டுவது கடவுளின் எல்லையில்லா வல்லமை அல்ல மாறாக அவரின் இரக்கமே என்று கூறினார்.

நாம் தீர்ப்பிடப்பட விரும்பவில்லை எனில் நாம் பிறரை தீர்ப்பிடக்கூடாது என்றுரைத்த திருத்தந்தை இறுதித் தீர்ப்பு நாளில் நம் ஆண்டவர் நம்மைக் கனிவோடு நோக்க வேண்டுமெனவே அனைவரும் விரும்புகிறோம் என்றும் ஆண்டவரும் நம் வாழ்வில் நாம் செய்த பல மோசமான செயல்களை மறந்து விடுவார் என்றும் கூறினார்.

நாம் தீர்ப்பிடுபவர்களாக இருக்கும் போது வெளிவேடக்காரர்கள் என இயேசு நம்மை அழைக்கிறார். எனவே நாம் தொடர்ந்து மற்றவரைத் தீர்ப்பிட்டுக் கொண்டே இருந்தால் அதே அளவையுடனே நாமும் தீர்ப்பிடப்படுவோம். எனவே நாம் நம்மைக் கண்ணாடியில் பார்க்குமாறு ஆண்டவர் நம்மிடம் கேட்கிறார் என்றார் திருத்தந்தை.

மற்றவரைத் தீர்ப்பிடுவதற்குப் பதிலாக அவர்களுக்காகச் செபிக்க வேண்டுமென்றும் நாம் கடவுளின் இடத்தில் நம்மை வைக்கும் போது அவர் சற்று சினமுற்று நம்மை வெளிவேடக்காரர்கள் என அழைப்பார். தீர்ப்பிடுபவர்களாக இருப்பது மிகவும் அசிங்கமானது தீர்ப்பு கடவுளுக்கு மட்டுமே உரியது என்றும் விளக்கினார் திருத்தந்தை.

நம் தீர்ப்பு ஒருபோதும் உண்மையான தீர்ப்பாக இருக்காது ஆண்டவரின் தீர்ப்புப் போல நம் தீர்ப்பு இருக்க முடியாது. ஏனென்றால் நாம் எல்லா வல்லமையும் படைத்தவர்கள் அல்ல என்றுரைத்த திருத்தந்தை. நம் தீர்ப்பில் இரக்கம் குறைவுபடுகின்றது. என்றும் தீர்ப்புப் பற்றி நாம் உணர ஆண்டவர் உதவுவாராக என்றும் கூறினார்.

ஆதாரம் : வத்திக்கான் வானொலி

குறிப்பு:
பரிசுக்குரியவர்கள் தங்களது பரிசில்களை திருமறைக்கல்வி நடுநிலைய அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

## மறைக்கல்வி கற்போம் - 17

**01. இயேசுவின் பன்னிருசீடர்களின் எந்த சீடரின் முகம் திருத்தந்தையின் மோதிரத்தில் பதிக்கப்பட்டுள்ளது?**
தூய பேதுரு

**02. ஆலயத்தினுள் நற்கருணை ஸ்தாபித்திருப்பது எதற்காக?**
அது நோயாளருக்கு எடுத்துச் செல்வதற்காகவும் நாம் வழிபடுவதற்காகவுமே

**03. குருத்துவத்தின் மூன்று நிலைகளும் எவை?**
ஆயர் நிலை, குருக்கள் நிலை, திருத்தொண்டர் நிலை



**04. இறைவனின் மக்களாக வாழ நாம் என்ன செய்யவேண்டும்?**
இயேசுவைப் பின் செல்ல வேண்டும்

**05. ஆன்மீக நற்செயல்கள் யாவை?**
1. பாவிகளை பாவத்திலிருந்து மனம்திருப்புதல்
2. அஞ்ஞானிகளுக்கு கற்பித்தல்
3. சந்தேகத்திலுள்ளவர்களுக்கு அறிவூட்டுதல்
4. துன்புறுவோருக்கு ஆறுதல் அளித்தல்
5. நிந்தனையையும் துன்பத்தையும் பொறுமையுடன் சகித்தல்
6. குற்றங்களை மன்னித்தல்
7. வாழ்வோருக்காகவும் மரித்தோருக்காகவும் செபித்தல்

**06. மரியன்னையிடமும் புனிதர்களிடமும் நாம் மன்றாடும் போது அவர்களிடம் நாம் வேண்டுவது என்ன?**
எமக்காக இறைவனிடம் மன்றாடும் படி

**07. பொய்யான விசுவாசம் என்பது என்ன?**
படைப்பு பொருள் ஒன்றின் மீது இறைவல்லமை இருப்பதாக கருதி அதனை வணங்குவது

**08. இச்சையடக்கம் என்பது என்ன?**
தாமும் மற்றவர்களும் பாவத்தில் விழாதபடி தம் இச்சைகளைக் கட்டுப்படுத்திக் கொள்வதே

**09. இலங்கையில் உள்ள கடன் திருநாட்கள் எவை?**
1. ஆண்டின் எல்லா ஞாயிற்று கிழமைகள்
2. இறைவனின் அன்னையாகிய மரியாளின் திருவிழா (ஜனவரி 1)
3. மரியன்னை விண்ணேற்பு (ஆகஸ்ட்-15)
4. மரியன்னை அமல உற்பவ திருவழா (டிசம்பர் 08)
5. நத்தார் பெருவிழா (டிசம்பா 25)

**10. புனிதம் என்பது என்ன?**
தூய்மையான வாழ்வு வாழ்ந்து இறைவனை நெருங்குவதேயாகும்.

## வேலிகள் பாலங்கள் அமைப்போம்...

அண்ணனும் தம்பியும் அருகருகே இருந்த நிலங்களில் பயிரிட்டு வந்தனர். பல ஆண்டுகள் ஒற்றுமையாய் வாழ்ந்த இவ்விருவருக்கும் இடையே தோன்றிய ஒரு கருத்து வேறுபாடு பெரும் சண்டையாக மாறியது ஒரு நாள் தம்பி ஒரு புல்டோசரின் உதவி கொண்டு இரு நிலங்களுக்கும் இடையே ஆழமான ஒரு பள்ளத்தை உருவாக்கினார்.

அடுத்த நாள் அண்ணன் வீட்டிற்கு ஓர் இளைஞன் வந்தார். தனக்கு தச்சு வேலை தெரியும் என்று அறிமுகப்படுத்திக் கொண்ட அவ்விளைஞர் ஏதாவது வேலை தரும்படி அண்ணனிடம் விண்ணப்பித்தார். அண்ணன் அவரிடம் "அதோ அங்கு தெரிகிறதே, அது என் தம்பியின் வயல் அவனையோ அவன் வயலையோ நான் பார்க்க விரும்பவில்லை. வீட்டிற்கு பின்புறம் நான் அடுக்கி வைத்துள்ள கட்டைகளை கொண்டு, எனக்கும் அவனுக்கும் இடையே ஒரு உயரமான வேலியை எழுப்பி விடு" என்று சொல்லி விட்டு அண்ணன் ஊருக்குள் சென்றார். இளையவரும் தன் வேலையை துவங்கினார்.

மாலையில் அண்ணன் வீடு திரும்பிய போது அவருக்கு ஆச்சரியம் ஒன்று காத்திருந்தது. ஒரு வேலியை எழுப்புவதற்கு பதில் இரு நிலங்களுக்கும் இடையே இருந்த பள்ளத்தை இணைத்து ஒரு பாலத்தை கட்டியிருந்தார் இளையவர். அந்தப் பாலத்தின் மறுபுறம் வந்து நின்ற தம்பி அண்ணனைப் பார்த்து "அண்ணா என்னை மன்னித்து விடு நான் இவ்வளவு செய்தும் நீ இந்தப் பாலத்தைக் கட்டியிருப்பது உன் நல்ல உள்ளத்தை காட்டியிருக்கிறது என்று கூறினார். அண்ணனும் தம்பியும் அந்தப் பாலத்தின் மீது ஒருவர் ஒருவரை தழுவிக் கொண்டனர்.

அவ்வேளையில் அண்ணனிடம் விடைபெற வந்த இளையவரிடம் அண்ணன் "இன்னும் சில நாட்கள் இங்கேயே தங்கும் நீங்கள் செய்யவேண்டிய பல பணிகள் இங்கே உள்ளன" என்று கூறினார். அதற்கு அந்த இளைஞன் இங்கு தங்க எனக்கு ஆசைதான். ஆனால் நான் கட்டி முடிக்கவேண்டிய பாலங்கள் இன்னும் பல உள்ளன என்று சொன்னபடி விடைபெற்றுச் சென்றார். **வேலிகள் அல்ல பாலங்கள் அமைக்க இரக்கத்தின் காலம் நமக்கு அழைப்பு விடுக்கிறது.**

ஆதாரம் : வத்திக்கான் வானொலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனக்குடா தூய அந்தோனியார் ஆலய திருவிழா – 2016




17-06-2016 அன்று கொடியேற்றத்துடன் நவநாட்கள் ஆரம்பமாகி தொடர்ச்சியாக ஒன்பது நாட்கள் இரக்கத்தின் ஆண்டை மையமாக வைத்து பல அருட்பணியாளர்களின் அருளுரைகள் நிகழ்த்தப்பட்டன. தொடர்ந்து 26-06-2016 அன்று அதி மேதகு ஆயர் கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை தலைமையில் சீனக்குடா தூய அந்தோனியார் ஆலய பங்குத்தந்தை அருட்பணி ஜோர்ஜ் திசாநாயக்க, அருட்பணி ஆஞ்சலோ பொன்னையா S.J , அருட்சகோ. அஜித் ஆகியோர் இணைந்து சீனக்குடா தூய அந்தோனியார் ஆலய திருவிழாகூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

சீனக்குடா பங்குத்தந்தை அருட்பணி ஜோர்ஜ் திசாநாயக்க அடிகளாரின் வழிகாட்டலில் புதிதாக அமைக்கப்பட்ட தூய மிக்கேல் தாமரைத் தடாகம் அதி மேதகு ஆயர் கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகையினால் திறந்து வைக்கப்பட்டதும் இன்றைய நாளின் சிறப்பம்சமாகும்.

தூய அந்தோனியாரின் ஏராளமான பக்தர்கள் திருவிழாத் திருப்பலியில் கலந்து கொண்டு அவரின் ஆசீரை பெற்று சென்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தகவல் : P.J.P.

# மறைமாவட்ட பெந்தகோஸ்து பெருவிழா பாலையூற்று தூய லூர்து அன்னை திருத்தலத்தில்



நாட்டின் காலநிலை இயற்கையின் நிமித்தம் பாதகமாகவிருந்த சூழ்நிலையிலும் திருகோணமலை மறைமாவட்ட பாலையூற்று தூய லூர்து அன்னை திருத்தலத்தில் 14- 05 -2016 சனிக்கிழமை மாலை 6.30மணி தொடக்கம் நள்ளிரவு 11.30மணி வரை அருட்தந்தை டக்ளஸ் ஜேம்ஸ் அருட்தந்தை ஜீட் ஜோன்சன் அருட்தந்தை B. ஜெயபாலன் (அ ம தி) அருட்பணி மதுரங்கன் குரூஸ் அருட்தந்தை X.I. றஜீவன் ஆகியோர் வழிநடத்தினார்கள். பின்னர் 11.30 மணியளவில் மறைமாவட்ட ஆயரின் தலைமையில் கூட்டுத்திருப்பலி ஒப்புகொடுக்கப்பட்டது. ஆயரின் 30வது குருத்துவ ஆண்டு நிறைவை முன்னிட்டு வாழ்த்துப்பாடி மகிழ்ந்து கொண்டாடப்பட்டது

தகவல்: கத்தோலிக்க அருங்கொடை பணியகம்
திருகோணமலை

# குவாடலூப்பே அன்னை திருத்தல பிறிமரியா கிறிஸ்தவ வாழ்வு சமூகத்தின் திருச்சிலுவை கன்னியர்மட வயோதிபர் இல்லம் சந்திப்பு



குவாடலூப்பே அன்னை திருத்தல பிறிமரியா கிறிஸ்தவ வாழ்வு சமூக உறுப்பினரர்கள் கடந்தமாத இறுதியில் உப்புவெளியிலுள்ள திருச்சிலுவை கன்னியர் மடத்தினரால் பராமரிக்கப்பட்டு வரும் வயோதிபர் இல்லத்தை தரிசித்தனர். இறையிரக்க ஆண்டில் பிறரின் இன்ப துன்பங்களை அறிதல் என்பதற்கு அமைய மாலையில் ஒழுங்கு செய்ய்ப்பட்ட இந்நிகழ்வில் பிறிமரியா கிறிஸ்தவ வாழ்வு சமூக உறுப்பினர்கள் அங்குள்ள வயோதிபர்களுடன் கலந்துரையாடியதுடன் அவர்களது அனுபவங்களையும் கேட்டறிந்ததுடன் அவர்களுடன் சிற்றுண்டிகளை யும் பகிர்ந்து கொண்டனர்.

தகவல்: ச.அன்ரனிதாஸ்
பிறிமரியா கிறிஸ்தவ வாழ்வு சமூகம்
குவாடலூப்பே அன்னை திருத்தலம்

# பல தசாப்தங்களின் பின்னர் செபமாலை யாத்திரை பாலையூற்று தூய லூர்து அயன்னை திருத்தலத்தை நோக்கி



செபமாலையின் முக்கியதுவத்தை எடுத்தியம்பவும் அன்னை மரியாளின் மேன்மையை பறைசாற்றவும் பல தசாப்தங்களின் பின்னர் மறைமாவட்ட ஆயர் அதி மேதகு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை தலைமையில் 28-05-2016 ம் திகதி (சனிக்கிழமை) தூய மரியாள் பேராலயம், உவர்மலை, குவாடலுப்பே, அலஸ்தோட்டம், மற்றும் செல்வநாயகபுரம் ஆகிய பங்குகளிலிருந்து இறைமக்கள் அதிகாலை 5.30 மணிக்கு பாதையாத்திரையினை பங்குத்தந்தையர்களுடன் ஆரம்பித்தார்கள் பின்னர் காலை 7.30 மணியளவில் பாலையூற்று தூய லூர்து அன்னை திருத்தலத்தினை வந்தடைந்து இறைமக்கள் அனைவரும் ஒரு செபமாலை காரணிக்கத்தினை ஒரு விசேட விண்ணப்பத்திற்காக ஒப்புக் கொடுத்து ஜெபித்தார்கள். இறுதியில் மறைவாட்ட குருமுதல்வர் அருட்பணி ரி.கிங்ஸ்லி றொபட் தலைமையில் கூட்டுத்திருப்பலி ஒப்பு கொடுக்கப்பட்டு அனைத்து நிகழ்வுகளும் மகிழ்வுடன் நிறைவேறியது

தகவல்: திருமதி. அன்ரனிதாஸ் சகாயம்.

# பாலையூற்று தூய லூர்து அன்னை வருடாந்த திருவிழாவும் கலைவிழாவும் – 2016.



பாலையூற்று தூய லூர்து அன்னை திருத்தலத்தின் 110வது வருடாந்த திருவிழா 29.05.2016ம் திகதி மறைமாவட்ட ஆயர் அதி மேதகு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களின் தலைமையில் 13 அருட்தந்தையர்கள் இணைந்து கூட்டுத் திருப்பலியினை ஒப்புகொடுத்தார்கள். அன்று மாலை 6.00மணிக்கு நடைபெற்ற கலை விழாவில் தங்கள் குருத்துவ வாழ்வில் வெள்ளிவிழா கொண்டாடிய முன்னைய நாள் பங்குத்தந்தையர்களான....

☞ தொடர்ச்சி 3ம் பக்கம்

"ஆண்டவரே உமது பேரன்பை எங்களுக்குக் காட்டியருளும். (தி.பா – 85:7)"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org